மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சரவர்கள் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். இப்போது இல்லாவிட்டாலும்கூட, இனிமேலாவது அதை பரிசீலனை செய்து, எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சித்திவிநாயகர் கோவிலுக்கு அருகில் காளிபாளையம் கிராமம் சர்வே எண் 303-ல் ஒரு குட்டை அமைப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டதில், தெளிவான ஓடைப்போக்கு இல்லை என்றும், வடிநீர் பரப்பளவு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது என்றும், அக்குட்டை பட்டா நிலங்களிலே அமைக்கப்பட வேண்டியிருப்பதால், நிலம் கையகப் படுத்துவதில் ரூ. 15,000 செலவாகும் என்றும் தெரிவதால் அங்கே குட்டை அமைப்பது சாத்தியமில்லை.

தாண்டாகவுண்டனூருக்கு அருகில் ஒரு குட்டை அமைப்பது குறித்து, பரிசீலிக்கப்பட்டு, 1,67,000 ரூபாய் செலவில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, சில விளக்கங்கள் பெறுவதற்காக வருவாய்த்துறை வாரியம் மேற்பார்வைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிறது. பதில் வந்தவுடன் அதில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 33 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் S. F. No. 278 தொட்டிபாளையம் கிராமத்தில் குட்டை அமைக்கும் வேலை எப்போது துவக்கப்படும் ?

(இ) மேற்படி வேலை முடிவு பெற எவ்வளவு நாட்கள் ஆகும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொட்டிபாளையம் கிராமத்தில் S. F. No. 278-ல் குட்டை அமைக்கும் வேலை ஒன்றும் தற்பொழுது தொடங்குவதாக இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

1973 பிப்ரவரி 6]

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அவ்விடத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னால் பெய்த பெருமழையின் காரணமாக அந்த ஆற்றில் நிறைய தண்ணீர் வந்து, குட்டை எதுவும் இல்லாததால் பக்கத்தில் இருந்த 50 வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. அந்த வீடுகளுக்கு அரசாங்கத்திலிருந்து 50 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது. எனவே, உடனடியாக அந்தப் பகுதியில் ஒரு குட்டை அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரம். அது ஆதாயம் இல்லாதத் திட்டம் என்றாலும் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதுபற்றி முடிவு செய்யப்பட்டு, வருவாய்த்துறை மூலமாக கவனிக்கப் படும்.

Tiruvarur Rice Bran Oil Mill

* 34 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Rice Bran Oil plant at Tiruvarur has been making profits; and

(*b*) if so, the details thereof for the years 1970–71–72?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) திருவாரூரில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 1969–70-ஆம் ஆண்டில் ரூ. 2,00,000 நிகர லாபமும், 1970–71-ஆம் ஆண்டில் ரூ. 3,62,571.44 நிகர லாபமும், 1971–72-ஆம் ஆண்டில் இந்த ஆலையில் ரூ. 2,29,725.52 நிகர லாபமும் கிடைத்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அதற்கு முதலீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முதலீடு மொத்தம் தோராயமாக 20 லட்சம் ரூபாய்; சரியாக ரூ. 19,75,000.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : இதுபோன்ற தொழிற்சாலைகளை கூட்டுறவுத் துறையில் அமைக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தொழிற்சாலைகளை நிறுவ அரசிடம் திட்டம் இருக்கிறது. அது கூட்டுறவுத் துறையிலா அல்லது வேறு துறையிலா என்று முடிவு செய்யப்படவில்லை.